முருகப்பெருமான் துணை

**மகான் குரு பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.12.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானகுருவே ஆறுமுக அரங்கா
நல்வாழ்வு மக்களெல்லாம் பெற
தானதரும அவசியம் தனை
தயவாய் மக்களுக்கு அருளும்
2. அருளும் ஆறுமுக ஞானியே
அப்பனே உன் பெருமை கூறி
வரமென சோபகிருது தேள்திங்கள்
வல்லமைபட அறுநான்கு திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24 ம் நாள், 10.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசியை
வழங்குவேன் குருபகவானும்
சோரமிலா ஞானப்படைகளை
செகமெல்லாம் படைக்கவந்த ஞானி
4. ஞானி அரங்கமகான் சேவை
ஞாலமதில் மிக உத்தமமானது
கனிவேலவன் இறங்கி அருளும்
கருணை மிகுந்த மார்க்கமிது
5. மார்க்கம் தனை உலக மக்கள்
மனமுவந்து ஏற்றுத் தொடர
வார்த்தெடுத்த தங்கம் போல
வஜ்ரம் போல திடமும் ஆகி
6. ஆகியே அரங்கன் படைகள்
அனைத்தும் பொறிபுலன் வழி
வகையிலா மாயை கடந்து
வாழும் காலமே வள்ளலாக

7. ஆகவே சக்தி கூடியே
அழிவிலா நல்லுலகம் தனை
வகைபட படைத்திடுவர்
வருங்காலம் ஞானிகள் வெளிப்படும்

8. ஞானிகள் வெளிப்படும் சித்திமிகு
ஞான சித்தர் காலமாக
ஞானிகள் ஆசி ஆறுமுகன் ஆசி
ஞாலமதில் நிரம்பியிருக்கும்படி அற்புதம்

9. அற்புதம் அரங்கன் ஆசிபட
அகிலத்தில் தொண்டர்கள் தானும்
ஏற்பு கொண்டு படைப்பர்
எங்கும் எதிலும் அரங்கன் தருமம்

10. தருமம் அலங்கரிக்க இனிதே
தக்க ஞான ஆட்சி படைப்பர்
வருங்காலம் மக்கள் மகிழ
வறுமை வாட்டம் போக்கி

11. போக்கியே பேரிடர் அனுகா
பெருமைமிக்க பாதுகாப்புமிக்க
ஆக்கமான சேவை புரிந்து
ஆறுமுகனார் தலைமையின் கீழ் சிறப்பர்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–